12. கலை நிலை

அஃதாவது, சூரியகலை, சந்திரகலை, அமுதகலை யாகிய கலைகளின் நிலையினை உணர்த்துவது, அட்டமா சித்தியை அடைந்தார் அந்நிலையிற்றாழாது, சித்திகளையும் வென்று சிவமாம் பெரும்பேறு எய்தக் கலைகளை நிலைபெறுத் துதல் இன்றியமையாத செயலாதலின் அட்டமாசித்தியின் பின் இது வைக்கப்பெற்றது.

காதல் வழிசெய்த கண்ணுதல் அண்ணலைக்
காதல் வழிசெய்து கண்ணுற நோக்கிடிற்
காதல் வழிசெய்து கங்கை வழிதருங் 712
காதல் வழிசெய்து காக்கலு மாமே.

இ-ம் – எனின், புருவ நடுவை நோக்கிக் கலையை நிலைக்கச் செய்க என்றுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: அன்பையே தன்னையடையும் உபாயமாகத் தந்த நெற்றிக்கண்ணையுடைய இறைவனை, முறையாக அன்பு செய்து கண்களிரண்டும் ஒன்றி நோக்கின், மோதுதலால் வழி உண்டாக்கிக் கொண்டு கங்கை வழியும்; அதனை அன்பு கொண்டு காக்கலும் ஆம் என்றவாறு.

இறைவன் நினையுமா நினைத்தாலன்றி ஆன்மாக்கள் நினைக்குந் தன்மையில்லாதன ஆதலின், அவன் அன்பினைத் தந்தாலன்றி நாம் அன்பு செய்ய முடியாது ஆதலின் காதலை வழியாகச் செய்த கண்ணுதல் என்றார். இறைவன் பரமயோகி யாகிய நெற்றியிற் கண்படைத்திருக்கின்றான்; அதுபோல நீங்களும் புருவமத்தியிற் கண்ணுற நோக்கிக் காதல் செய்க என மேல்வருங் கருத்தை நன்கு விளக்கியவாறு.

இடகலை பிங்கலை நாடிகளைக் கங்கை யமுனைகளாக உருவகித்தல் யோகநூன் மரபு. இதனை,

गङ्गा यमुनयोर्मध्ये बालरण्डा तपस्विनी।
बलात्कारेण गृहणीयात्तद्विष्णोः परमंपदम्।।

என்னும் ஹடயோகப் பிரதீபிகையானும் உணர்க. கங்கையென ஆறாக உருவகித்தமைக்கு ஏற்ப வழிதரும் என்றாரேனும் கங்கையாகிற இடகலை தடைபட்டுச் சுழுமுனையாகிய வழியைத் தரும் என்பது பொருளாகக் கொள்க. காதல் – காதுதல், மோதுதல் அங்ஙனம் காதுதலையே உபாயமாகச் செய்து. காக்கலும் ஆம் – நிலைபெறுதலும் ஆம் என்பதாம். கங்கை வழிதரும் என்பதற்கு அமுதம் பெருகும் என்பாரும் உளர்.

காக்கலு மாகுங் கரணங்கள் நான்கையும்
காக்கலு மாகுங் கலைபதி னாறையும்
காக்கலு மாகுங் கலந்தநல் வாயுவும் 713
காக்கலு மாகுங் கருத்துற நில்லே.

இ-ம் – எனின், காக்கத்தகுவன இவையெனல் நுதலிற்று.

இ-ள்: அந்தக்கரணங்கள் நான்கையும் காத்தலுமாம். குண்டலினியோடு கலந்த பிராணனைக் காத்தலுமாம். அதனால், கருத்தைப் புறம்போகவொட்டாது காத்தலுமாம், அதனால், சாதகனாகிய புருவமத்தியத் தானத்திலேயே நிலைத்து நிற்பாயாக என்றவாறு.

நிலைபெற நின்றது நேர்தரு வாயு
சிலைபெற நின்றது தீபமும் ஒத்துக்
கலைவழி நின்ற கலப்பை அறியின்
மலைவறி வாகும் வழியிது வாமே. 714

இ-ம் – எனின், மருளறும் உபாயம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: சுழுமுனையில் செல்லும் வாயு நிலைபெற நின்றது. விளக்கொளியைப் போன்றும் அசையாத மலையைப் போன்றும் நின்றது. உன்மனையாதி கலைகளின் வழியே சத்தி சிவத்தைக் கலந்துநின்ற கூட்டத்தை அறியின், மயக்கமானது நீங்க ஞானம் விளையும் இதுவே நிலைபெறும் உபாயமாம் என்றவாறு.

நேர் – நடுநாடியாகிய சுழுமுனை. சிலைபெற – மலையைப் போல. பெற – உவம உருபு. தீபம் ஒளிக்கும், சிலை அசையாத்தன்மைக்கும் உவமம். மலை அறிவு ஆகும் – ஐயமாகிய மருள் நிங்க அருண்ஞானம் விளையும்.

புடையொன்றி நின்றிடும் பூதப் பிரானை
மடையொன்றி நின்றிட வாய்த்த வழியில்
சடையொன்றி நின்றஅச் சங்கர நாதன்
விடையொன்றி லேறியே வீற்றிருந் தானே. 715

இம் – எனின். விசுத்தித்தானத்து இறைவன் வீற்றிருக்கும் நிலை உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்: எங்கும் நிறைந்துள்ள, பூதங்களுக்குத் தலைவனாகிய பராகாயத்தை, மடைகளாகிய நாடிகளில் மாறிச் செல்லாது (பிராணன்) நடுநாடியில் ஒன்றி நிற்க வாய்த்த வழியில் சடையோடு கூடிய அந்தச் சங்கரனாகிய தலைவன், இடபம் ஒன்றிலேறி வீற்றிருந்தான் என்றவாறு.

பராகாயமாகிய மதிமண்டலத்துப் பொருந்த வாய்த்த வழியாகிய சுழுமுனையில் விசுத்திசக்கரத்துச் சங்கரன் இடபாரூடராகக் காட்சியளித்தார் என்பது கருத்து. புருவமத்தியில் இறைவன் சதாசிவன் மனோன்மணியாக எழுந்தருளியருத்தலின் இங்ஙனம் அருளினார். விடையேறியிருத்தலாவது விஷ்ணு கிரந்தியைத் தாண்டியிருத்தல். இதனையே புராணங்கள், திருமாலாகிய இடபத்தைப் பெருமான் ஊர்வதாக உரைக்கும்.

பூதப்பிரான் – ஏனைய நான்கு பூதங்களும் ஒன்றுதலுக்கிடமாய் விரிந்து இடங்கொடுக்கும் ஆகாயம். ஈண்டுப் பராகாயமாகிற ஆஞ்ஞையை சிவன் என்பாரும் உளர்.

இருக்கின்ற காலங்கள் ஏதும் அறியார்
பெருக்கின்ற காலப் பெருமையை நோக்கி
ஒருக்கின்ற வாயு வெளிபெற நிற்கத்
தருக்கொன்றி நின்றிடுஞ் சாதக னாமே. 716

இம் – எனின், சாதகனியல்பினை உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்: தாம் பிராணனைக் கட்டிச் சமாதியிலிருக்கின்ற காலங்களை அறியாராய் இனிப் பெருக இருக்கின்ற காலத்தின் பெருமையை எதிர்நோக்கி, சுழுமுனையின் வாயிலாக ஒன்றுபட்டிழைக்கின்ற பிராணன் பரவெளியாகிய சகத்திராரத்தைப் பொருந்தச் செருக்கொன்றி நிற்பவன் சாதகனாம் என்றவாறு.

சமாதியிலிருக்கின்ற காலமும், தானும் அறியப்படின் அது உண்மையான சமாதியன்றாம் ஆதலின் அதனையறியார் என்று அருளியது.

பெருக்கின்ற காலம் – இனிப்பெருக வாழ இருக்கின்ற காலம். ஒருக்கின்ற வாயு – ஒருவழிப்பட்ட அதாவது ஆயாமப் படுத்தப்பட்ட பிராணன். வெளி – பிரமரந்திரமாகிய மதி மண்டலம். இதுவே பராகாயமுமாம். தருக்கு ஒன்றி – யாமார்க்கும் குடியல்லோம் என்பது முதலிய சுத்தாகங்கார விளைவாகிய தருக்கு. இது மேல்வினைக்கு வித்தாகாதது. தருக்கின்றி எனவும் பாடம்.

சாதக மானஅத் தன்மையை நோக்கியே
மாதவ மான வழிபாடு செய்திடும்
போதக மாகப் புகலுறப் பாய்ச்சினால் 717
வேதக மாக விளைந்து கிடக்குமே.

இம் – எனின், சாதகன் எய்தும் பயன் உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்: இவ்வண்ணம் சாதகமான அத்தன்மையை ஆராய்ந்து, பெரிய தவமான வழிபாட்டைச் செய்யும் சிவயோகி, தமது பிராணனைக் கபாலத்திலுள்ள ஆயிர இதழ்த் தாமரையினுள்ளாகப் புகச் செலுத்தினால் குளிகைபோல விளையும் என்றவாறு.

மாதவமான வழிபாடு – அகண்டமான சமாதி. செய்திடும் என்பது செய்திடும் அவன் என்றவரை பொருள் கொள்ளக் கிடத்தல் காண்க. போது அகம் – தாமரைப்பூவின் உள்ளிடம். வேதகம் – இரும்பைப் பொன்னாக்கும் இரத குளிகை. விளைந்து கிடக்குமேயென்றது அதன் மிகுதி உணர்த்திற்று.

கிடந்தது தானே கிளர்பயன் மூன்று
நடந்தது தானேஉள் நாடியை நோக்கிப்
படர்ந்தது தானே பங்கய மாகத்
தொடர்ந்தது தானேஅச் சோதியுள் நின்றே. 718

இம் – எனின், மேலதனை வேறொருவாற்றான் விளக்குதல் நுதலிற்று.

இ–ள்: அங்ஙனம் விளைந்து கிடந்த பயன் இம்மை யின்பமும் மறுமையின்பமும் வீடும் என மூன்றாம். உள்நாடி யாகிய சுழுமுனையை நோக்கி நடந்ததாகிய பிராணன் சகத்திரா ரத்திற் பொருந்த, அச்சோதி மூலத்துள் நின்றே தொடர்ந்ததாம் என்றவாறு.

கிடந்ததுதான் தொடர்ந்ததுதான் என்பவற்றுள் தான் இரண்டும் அசை. கிளர் பயன் – மேன்மேலும் கிளர்ந்து விளைகின்ற பயன்; அவை இம்மை, மறுமை இரண்டுங் கடந்த வீடு இவற்றின் பயன். அறம் பொருள் இன்பம் என்பாரும் உளர். இவை மூன்றும் இம்மையின்பிலடங்குதலின் சிவயோகத்தின் பயன் இவை மட்டுமல்ல என ஓர்ந்து எண்ணுக.

உள்நாடி – சுழுமுனை. தான் – பிராணன். பங்கயத்தின் கண் என ஏழாவது விரிக்க. அச்சோதி உள்நின்று தொடர்ந்தது எனப் பிரித்துக் கூட்டி, முற்கூறியவாறு, தாமரைக் கண்ணாகிய பிராணனை மூலத்தீ மூலாதாரத்துண்ணின்றும் தொடர்ந்து சென்றது எனப் பொருள் கொள்க.

தானே எழுந்தஅத் தத்தவ நாயகி
ஊனே வழிசெய்தெம் உள்ளே யிருந்திடும்
வானோர் உலகீன்ற அம்மை மதித்திடத்
தேனே பருகிச் சிவாலய மாகுமே. 719

இ-ம் – எனின், மேற்கூறிய வண்ணம் எழுந்த மூலக்கனல் செய்யும் உபகாரத்தை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: இவ்வண்ணம் தானேதானாய் எழுந்த தத்துவ நாயகியாகிய குண்டலினி சத்தியானவள், இவ்வுடலில் வழி செய்து கொண்டு எமக்குள்ளாகவே எழுந்தருளியிருப்பள். தேவ நுலகையும் பெற்ற தாயாகிய சத்தி திரட்டித்தர, தேன் போன்ற அமுத மாரியையுண்டு, சிவயோகியின் உடல் சிவாலயமாகும் என்றவாறு.

தானே எழுந்த என்றது கருணை மிகுதியைக் காட்டிற்று. குண்டலினியை முன்னர்ச் சோதியாக உருவகித்தவர் ஈண்டுச் சத்தியாக உருவகித்தார் ஊன் – உடல்; ஆகுபெயர். வழி செய்தலாவது இடகலை பிங்கலைகளை அடைத்து நடுநாடியைத் திறப்பித்தல். மதித்திட – கடைந்து திரட்டித்தர. தேன் – மதிமண் டலத்தூறுகின்ற அமுதம். சிவாலயமாகும் சிவனோடுலயமாகும் தானமாம் இவ்வுடல் என்பது. "ஊனுடம் பாலயம்" (1823) என்றதும் காண்க.

திகழும் படியே செறிதரு வாயு
அழியும் படியை அறிகில ராரும்
அழியும் படியை அறிந்தபின் நந்தி
திகழ்கின்ற வாயுவைச் சேர்தலு மாமே. 720

இ-ம் – எனின், பிராணனது ஒடுக்கத்தையறியின் சிவத்தைப் பொருந்தலாம் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: விளங்கும் வண்ணம் செறிகின்ற பிராணன் ஒடுங்குதலை யாரும் அறிகிலர். அதனை அறிந்த பின்பு மதி மண்டலத்து விளங்கும் வாயுவைச் சேர்தலும் புரிவர் என்றவாறு.

வாயுகட்டுப்படின் ஆன்மா விளக்கமுறுமாதலின் திகழும்படியே செறி தருவாயு என்றருளினர். அழியும்படியை - நடுநாடியின் வழியே மேற்சென்று மதி மண்டலத்து ஒடுங்கும் முறையை. நந்தி – சிவம். சிவம் வாயுவைச் சேர்தலாவது மதி மண்டலத்துப் பரசிவத்தோடு பிராணன் தாடலைபோல் அடங்கிச் சிவன் வசமாக இருத்தல். நந்தி சேர்தலுமாமே என நந்தியை வினைமுதலாகக் கூறியது உயிர்க்கு என்றும் சுதந்திரமின் மையின்.

சோதனை தன்னில் துரிசறக் காணலாம்
நாதனும் நாயகி தன்னிற் பிரியுநாள்
சாதக மாகுங் குருவழிப் பட்டு
மாதன மாக மதித்துக்கொள் ளீரே. 721

இம் – எனின், சிவயோக சித்தியின் அடையாளம் அறிவித்தல் நுதலிற்று.

இ—ள்: யான் கூறுவதைச் சோதனைகள் செய்து குற்றமறக் காணலாம். உடலுக்கு நாதனாகிய பிராணன் குலேசையாகிய குண்டலினியை விட்டுப் பிரிகின்ற நாளில் சிவயோக சமாதி சாதகமாகும். இதன் முறைகளைக் குருவின் வழியிலே நின்று, பெரிய செல்வங் கிடைத்தாற்போலப் போற்றிக் கொள்ளுங்கள் என்றவாறு.

'தேசியுந் தேசனும் தன்னிற்பிரியும் நாள்' (723) எனப் பின வருதலுங் காண்க.

நந்தன் — பிராணன், உடலுக்குத் தலைவனாதலின் 'னாக்குத் தலைமகன்' என்று முன்னரும் கூறியமை காண்க. நாயகி - குண்டலினி. பிராணன் குண்டலினியைப் பிரிதலாவது சுழுமுனையின் வாயிலைக் குண்டலினி அடைத்துக் கொண்டிருக்கும்; சத்தி சாலன முத்திரையால் இரண்டு நாழிகை அளவு மேலெழுப்ப அது சுழுமுனை வாயிலை விடுகிறது; உடனே பிராணவாயு சுழுமுனையையடைகிறது; இதன் விரிவைக் குரு முகமாகக் கேட்டுப் பெருஞ்செல்வம் பெற்றோர் போலப் போற்றிக் கொள்ளுங்கள் என்பது கருத்து.

இங்ஙனமன்றிச் சிவபெருமான் அமிழ்த வண்ணன்; அவன் மறைப்பாற்றலாகிய ஆதியின்கண் வீழாது குருவாய் வெளிப்படுவன்; அவன் வயப்பட்டொழுகினால் திருவருட் பேறெய்தலாம் என்பர் சிலர். அமுதமயமான சிவம் சூரிய மண்டலத்தில் உள்ள சத்தியில் வீழ்ந்து பிரியுநாள் குருகாட்டிய நெறியினின்று போற்றுங்கள் என்று வேறு சிலரும் கூறுவர். அவற்றின் இயைபை அறிந்தாய்ந்து நல்லன கொள்க.

ஈராறு கால்கொண் டெழுந்த புரவியைப்
பேராமற் கட்டிப் பெரிதுண்ண வல்லிரேல்
நீரா யிரமும் நிலமாயி ரத்தாண்டும்
பேராது காயம் பிரான்நந்தி ஆணையே. 722

இம் — எனின், அழியா யாக்கையைப் பெறலாம் என்பதுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: கங்கையும் யமுனையுமாகிய இரண்டு ஆறுகளையும் வழியாகக் கொண்டு மேலெழுந்த குதிரையாகிய பிராணனை நடுநாடியை விட்டுப் பெயராமல் தடுத்து, பெரிதும் வெளிப்படாத வண்ணம் நுகர வல்லீராயின், அப்பு மண்ட

லத்தும், பிருதுவி மண்டலத்தும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளா யினும் உடலழியாது; சிவன் மேலாணை என்றவாறு.

ஈர் ஆறு – இடகலை பிங்கலைகள். இவற்றைக் கங்கை யமுனையென்று ஈராறுகளாக உருவகித்தமை முன்னரும் உணர்த்தப் பெற்றது. புரவி என்றது தாவிக் குதித்தோடும் பிராண வாயுவின் உச்சுவாச நிச்சுவாசங்கள். பேராமற் கட்டுதலாவது நடுநாடியின் உச்சியிலேயே அசையாது நிறுத்துதல். பெரிதுண் ணுதலாவது இழுக்குங் காற்றில் காற்பங்கு வெளிப்பட்டு முக்காற் பங்கு நுகர்தல். நிலத்துள்ளும் நீருள்ளும் ஆயிரம் ஆயிர மாண்டுகள் ஆழ்ந்திருந்தாலும் உடலழியாது என்பதாம்.

பிராணாயாமியின் உடல் எத்தனையாண்டு புதையுண் டிருப்பினும் அழியாது என்பது கருத்து.

ஓசையில் ஏழும் ஒளியின்கண் ஐந்தும்
நாசியின் மூன்றும் நாவில் இரண்டும்
தேசியுந் தேசனுந் தன்னிற் பிரியுநாள்
மாசறு சோதி வகுத்துவைத் தானே. 723

இம் – எனின், இறைவன் நமக்குச் செய்த உபகாரம் இவையென உணர்த்துதல்நுதலிற்று.

இ–ள்: குற்றமற்ற சோதியாகிய சிவபெருமான் பிராணனும் குண்டலினியாகிய மாயையும் தம்முட் பிரியுங் காலத்து, ஓசையாகிய தன்மாத்திரையினின்று சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், சரித்தல், சேர்த்தலாகிய ஏழும், ஒளியாகிய தன்மாத்திரையினின்று ரூபம், ரசம், கந்தம், வெப்பம், தகித்தல் என்ற ஐந்தும், நாசியாகிய பொறியின், தன்மாத்திரையினின்று கந்தம் இடகலைபிங்கலையாகிய இயக்கம் இரண்டு ஆக மூன்றும்

நாவின் தன்மாத்திரையிலிருந்து ரசம், வசனமாகிய இரண்டு மாகப் பிரித்து வைத்தான் என்றவாறு.

தேசு – ஒளி; பிராணன். தேசி – ஆன்மா. ஆன்மா மாயையிற் பிரிகின்ற காலத்துத் தத்துவங்களனைத்தையும் அவற்றுள் மூலமறிந்து அதாவது தத்துவ தரிசனம் செய்து போங்கால், ஆகாய நுண்பூதத்தினிடமாக முற்கூறிய ஏழும் ஒளி வடிவாகிய தேயுப் பூதத்தினிடமாக உருவமாதி ஐந்தும், நாசியாகிய பொறியின் குணமாய்ப் பிருதிவியின் தன்மாத்திரையாய கந்தமும் உச்சுவாசமாய செயலிரண்டும் ஆக மூன்றும் நாவாகிய பொறியின் தன்மாத்திரையாகிய ரசம் வசனம் இரண்டும் ஆகிய இவைகளையே கண்டிருக்க இறைவன் அருள் செய்வனாதலின் இவ்வண்ணம் அருளினர்.